# கோயில்கள் வரலாற்றுக் களங்கள்

ச. கமலக்கண்ணன்

*தனிமைச் சுவையுள்ள சொல்லை -- எங்கள்*
*தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை!*
*நனியுண்டு நனியுண்டு காதல் -- தமிழ்*
*நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில்*

யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்குப்படி இன்று தமிழர்கள் வசிக்காத இடம் என்ற ஒன்று இவ்வையத்தில் எங்குமே இல்லை எனுமளவுக்கு எங்கெங்கு காணினும் தமிழர் நாம் பல்துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வருகிறோம். தமிழர்கள் எண்ணிக்கைக்கேற்ப அயலகங்களில் சங்கங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது கண்கூடு. பல்வேறு காரணங்களுக்காக ஒரே பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் இருப்பது இன்றைய இந்தியச் சூழலில் தவிர்க்கவியலாதாக இருக்கிறது. எனினும் எல்லா நதிகளும் கடலை நோக்கியே என்பதுபோல எல்லாச் சங்கங்களின் குறிக்கோளும் தமிழ், தமிழர், தமிழ்நாடு உயர்வை நோக்கியே இருப்பின் சிறப்பே.

சிறார் திறமை வளர்த்தல், மகளிர் உரிமை பேணுதல், வறுமைத்தளை அறுத்தல், சமத்துவம் பாராட்டுதல் எனத் தமிழர் நம் முன் இருக்கும் பணிகள் ஏராளம். இளமைப் பருவம் முதலே இவற்றை விழுமியங்களாகக் கொண்டு காலந்தோறும் வாழ்ந்துவந்த எண்ணற்ற மன்னர்களின் தலைவர்களின் வழிகாட்டலில் இன்று தமிழ்நாடு உயரிய நிலையை அடைந்திருக்கிறது. கலைகளுடன் இயைந்த வாழ்வு வாழும் தமிழர்களுடன் இவ்விழுமியங்கள் பிணைந்து வந்திருப்பதற்குச் சங்ககாலம் தொட்டே பல இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன. நம் மரபின் சிந்தனைத் தொடர்ச்சியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்ல இச்சங்கங்கள் பயன்படவேண்டும். மரபும் சிந்தனையும் மட்டுமின்றி இயற்கை வளங்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் சேதமின்றி அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதிலும் உலகத் தமிழர்க்கு மாற்றுக்கருத்து ஏதும் இருக்காது.

இந்தச் சூழலில்தான் இலக்கியங்களிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் பாடங்கற்றல் என்பது இன்றியமையாததாகிறது. கடந்துவந்த பாதை தெரிந்தால்தான் செல்லவிருக்கும் பாதை தெளிவாகும். நல்ல இலக்கியங்கள் எல்லாமே வாழ்வைப் பற்றிய கேள்விகளை எழுப்பும்.



*திரு. ச. கமலக்கண்ணன், வரலாற்றிலும் இலக்கியத்திலும் மொழியியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 2004ம் ஆண்டு முதல் வரலாறு டாட் காம் [www.varalaaru.com] என்ற மின்னிதழை நடத்தி வருகிறார். தமிழ்-ஜப்பானிய மொழிகளுக்கிடையேயான இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து வருகிறார். வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் [NRTIA] ஜப்பான் கிளையின் துணைத்தலைவர் மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை ஜப்பான் கிளையின் ஆலோசகர்.*

பழந்தமிழ் இலக்கியங்களைச் சங்ககாலம், சங்கம் மருவிய காலம், பக்தி இயக்கக் காலம், பிற்காலம் எனக் காலவரிசைப்படுத்தலாம். சங்க இலக்கியங்கள் கி.மு 3 முதல் கி.பி 3ம் நூற்றாண்டு வரை இயற்றப்பட்டவை என்பது பெரும்பாலான தமிழறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவு. பல நூல்கள் காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தாலும் திருக்குறள், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தமிழ்நாட்டைக் களப்பிரர்கள் ஆண்ட சங்கம் மருவிய காலத்தை இருண்டகாலம் எனச் சொல்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அண்மையில் பல ஆய்வறிஞர்கள் களப்பிரர் காலம் இருண்டகாலம் அல்ல என நிரூபித்திருக்கிறார்கள்.

89 தமிழ் பிராமி கல்வெட்டுகளையும் 21 முற்கால வட்டெழுத்துக் கல்வெட்டுகளையும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை எனத் திரு. ஐராவதம் மகாதவன் தொகுத்திருக்கிறார். பதினைந்திற்கும் மேற்பட்ட செப்பேடுகள் கி.பி. 250ல் இருந்து கி.பி 600 வரையிலான காலகட்டத்தில் வெளியிடப்பட்டதாகக் கல்வெட்டறிஞர்களால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரம் உள்ளிட்ட ஐம்பெருங்காப்பியங்களும் நீலகேசி முதலான ஐஞ்சிறுகாப்பியங்களும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவும் இக்காலத்தில் இயற்றப்பட்டதாகத் தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்வர். எனவே, களப்பிரர் காலத்தை இருண்டகாலம் என இனியும் கூறுவது பொருத்தமற்றது.

பக்தி இயக்கக் காலத்தில் உருவான திருமுறைகளும் பிற்காலத்தில் இயற்றப்பட்ட திருவாசகம், கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவையும் அன்றைய காலகட்டத்தின் அரசுமுறை, மக்கள் வாழ்க்கைமுறை, பொருளாதாரம் போன்றவற்றைப் பதிவுசெய்து வரலாற்றுப் புதையல்களாகக் கண்சிமிட்டுகின்றன. இவற்றிற்கு இணையான வரலாற்றுக் களங்களாகத் திகழ்பவை தமிழ்நாட்டுக் கலைக்கோயில்கள் என்றால் மிகையாகாது. கல்வெட்டுகளில் வெளிப்படுவது மட்டுமின்றிக் கட்டட அமைப்புகளிலும் சிற்பங்களிலும் எண்ணற்ற வரலாற்றுத் தகவல்களைக் கொண்டு தட்டுவார் திறனுக்கேற்பத் திறக்கும் கதவுகள் அவை. சங்ககாலத்தில் செங்கல், சுதை, மரம், உலோகம் ஆகியன கொண்டு கட்டப்பட்டுவந்த இறையகங்கள் கி.பி ஆறாம் நூற்றாண்டில் பல்லவப் பேரரசர் மகேந்திரவர்மர் காலத்தில் மாற்றம் பெறுகிறது. அதுவரை கருங்கல் என்பது அமங்கலமாகக் கருதப்பட்டு வந்ததா எனத் தெரியவில்லை. ஆனால் விழுப்புரம் அருகிலுள்ள மண்டகப்பட்டு என்ற இடத்தில் முதன்முதலில் மலைப்பாறையைக் குடைந்து மும்மூர்த்திகளுக்கும் கோயில் எடுப்பித்த மகேந்திரவர்மர் கல்வெட்டில் வெளிப்படையாக “என்றும் அழியாத இறைவனுக்கு என்றும் அழியாத கருங்கல்லால் இத்தளியை எடுப்பிக்கிறேன்” என வெட்டி வைத்துள்ளார். அதிலிருந்து கோயில்களும் சிற்பங்களும் கல்லெழுத்துக்களும் அழியாவரம் பெறத்தொடங்கின.

கட்டடக்கலைக் கூறுகளை வைத்து அக்கட்டுமானத்தின் காலத்தை எவ்வாறு கண்டறிவது என வரலாறு.காம் மின்னிதழில் தொடர் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கோயிற்கலை ஆய்வுகள் மூலமாக வரலாற்றை

வளப்படுத்தும் பணியைத் திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தினர் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக மேற்கொண்டு வருகிறார்கள். காலந்தோறும் வரலாற்றாய்வுகள் புதிய தரவுகளுடன் மீளாய்வு செய்து புதுப்பிக்கப்படக் கோயில்களே நமக்குப் பெருந்துணையாக இருந்திருக்கின்றன. கல்கியின் மாபெரும் வரலாற்றுப் புதினமான பொன்னியின் செல்வனுக்குக் கதைக்கருவைத் தந்தது காட்டுமன்னார்கோயிலில் இருக்கும் ஒரு கல்வெட்டுதான் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? வரலாற்றில் உடையார்குடி என்றழைக்கப்படும் இன்றைய காட்டுமன்னார்கோயில் அனந்தீசுவரர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில்தான் சோழ இளவரசன் ஆதித்தகரிகாலன் கொலை செய்யப்பட்டதும் அவரைக்கொன்ற ரவிதாசன், சோமன் சாம்பவன், பரமேசுவரன் முதலானவர்களை அருமொழி என்கிற இராஜராஜசோழன் தண்டித்ததும் பதிவாகியுள்ளன. இந்த ஒரு வரியை வைத்துத்தான் கல்கி அவ்வளவு பெரிய புதினத்தைப் புனைந்திருக்கிறார்.

பல்லவ வம்சத்தில் முதலாம் நரசிம்மவர்மர் என்றொரு மன்னர் வாழ்ந்ததற்கான சான்று திருக்கழுக்குன்றம் குடைவரைக்கோயிலில் இருக்கும் ஒரு கல்வெட்டுதான் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? உலகப் புராதனச் சின்னமாக விளங்கும் கங்கைகொண்ட சோழபுரத்தை எழுப்பியவர் முதலாம் இராஜேந்திரர் என்று நமக்கு எப்படித் தெரிகிறது? சோழதேசத்தில் எங்குமே இத்தகவல் பதியப்படவில்லை. பாண்டியநாட்டின் தெற்கெல்லையில் இருக்கும் கன்னியாகுமரிக் கோயிலில் இராஜேந்திரசோழரின் மகன் வீரராஜேந்திரர் கல்வெட்டு இல்லாவிடில் இன்றும் கட்டியவரைத் தேடிக்கொண்டே இருந்திருப்போம். பல்வேறு மன்னர்களின் பள்ளிப்படைக்கோயில்கள் (இறந்தவரின் நினைவாக எழுப்பப்படும் கோயில்) கொண்டிருக்கும் கல்வெட்டுகளின் வழியாக அவற்றை எடுப்பித்தவர்கள் மற்றும் ஆட்சியாண்டுகளைக் கொண்டு சோழர் பரம்பரையின் ஒவ்வொரு மன்னரும் எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை ஆட்சி செலுத்தினார்கள், எப்போது மறைந்தார்கள் என நம்மால் வரையறுக்க முடிகிறது.

இந்தப் பள்ளிப்படைகளில் குறிப்பிடத்தகுந்தது குடந்தை நகருக்கு வெளியில் இருக்கும் பஞ்சவன்மாதேவி பள்ளிப்படை. பஞ்சவன்மாதேவி இராஜராஜசோழரின் மனைவியருள் ஒருவர். இவர் இறந்தபோது நினைவாக இக்கோயிலை எழுப்பியவர் இராஜேந்திரசோழர். தனது தந்தையின் ஐந்தாவது மனைவிக்கு மகன் கோயில் எடுப்பித்தது உலக வரலாற்றிலேயே எங்கும் காணவியலாத அதிசயம். பஞ்சவன்மாதேவியின் மீது எத்தகையதொரு மதிப்பும் மரியாதையும் இருந்தாலொழிய இது சாத்தியம்? அவ்வாறு மரியாதை ஏற்படப் பஞ்சவன்மாதேவி எத்தகைய குணநலன்களைக் கொண்டிருக்கவேண்டும்? இதுபோல் தமிழ்நாட்டுக் கோயில்கள் நமக்கு அள்ளித்தரும் வரலாற்றுப் புதையல்கள் ஏராளம்.

மேலே குறிப்பிட்டதுபோல் திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் அரை நூற்றாண்டுகளாக வரலாற்றுப்பணி செய்துவர வித்திட்டதும் ஒரு கோயில்தான். உறையூர் பஞ்சவர்ணசாமி கோயிலுக்கு முனைவர் இரா. கலைக்கோவன் அவர்கள் தற்செயலாக வழிபாட்டுக்காக சென்றிருந்தபோது

அங்கு ஒரு தூணிலிருந்த மிதிவண்டிச் சிற்பம் கண்ணில் பட்டது. மிதிவண்டி முதன்முதலாக ஐரோப்பாவில் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போதைய வடிவத்தை அடையச் சிலகாலம் பிடித்தது. இந்தியாவுக்கு, தமிழ்நாட்டுக்கு, திருச்சிராப்பள்ளிக்கு 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வந்திருக்கவேண்டும். அப்போது உறையூரில் திருப்பணியில் ஈடுபட்டிருந்த ஒரு சிற்பி தெருவில் யாரோ மிதிவண்டி ஓட்டுவதைப் பார்த்து அதைச் சிற்பமாக வடித்திருக்கவேண்டும். இப்படித்தான் வரலாற்றுத் தகவல்கள் கோயில்களில் பதியப்படுகின்றன என்ற புரிதலும் அது ஏற்படுத்திய ஆர்வமும்தான் வரலாற்றாய்வு மையம் உருவாகக் காரணமாக அமைந்தது.

எனவே, மரபின் சிந்தனைத் தொடர்ச்சியைக் கடத்துதலின் ஒரு பகுதியாகக் கோயில்களையும் சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் பாதுகாக்கவேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகிறது. இன்றைய சூழலில் கோயில்கள் அழியவும் பொலிவிழக்கவும் காரணமாக அமைவது பக்தர்களின் அறியாமையால்தான். நாத்திகர்கள் அவரளவில் கோயில்களுக்கு வருவதை விரும்புவதில்லையே தவிர இடிப்பதோ சிதைப்பதோ இல்லை. பெரும்பாலும் திருப்பணிகளின்போதுதான் கட்டடக்கலைக் கூறுகள் இடம்பெயர்ந்து காலக்குழப்பத்தை ஏற்படுத்துவதும் கல்வெட்டுகளின்மீது சிமெண்ட் பூசப்பட்டு வரலாறு மறைக்கப்படுவதும் சிற்பங்கள் வண்ணங்களால் உருமாற்றப்படுவதும் இயல்பாக நடக்கிறது. உதாரணமாக, வைகுந்தரென்றும் வைகுந்த நாராயணரென்றும் காஷ்மீரில் கொண்டாடி வணங்கப்படும் இறைத்திருமேனி அமைதி நிறைந்த மனித முகம், பன்றி முகம், நரசிங்க முகம், குதிரை முகம் ஆகியன கொண்ட அரிய விஷ்ணுவடிவம். அவரது தேவிதான் லட்சுமி, கீர்த்தி, ஜெயா, மாயா எனும் நான்கு பெண் தெய்வங்களின் ஒருங்கிணைந்த வடிவமான சக்திசதுஷ்கா. இந்தியாவிலேயே இராஜஸ்தானில் ஒரு சிற்பமும் திருச்சிராப்பள்ளி அருகிலுள்ள திருச்செந்துறை பெருமாள் கோயிலில் ஒரு சிற்பமும்தான் உள்ளன. இத்தகைய பின்புலத்தை அறிந்த வைணவர்கள் இன்று திருச்செந்துறைக்குச் சென்று சக்திசதுஷ்காவைத் தேடினால் கிடைப்பது நவநாகரிக வண்ணப்பூச்சால் அலங்கோலமாக்கப்பட்ட ஒரு கோட்டச்சிற்பம் மட்டுமே.

தொல்லியல்துறையிடம் கட்டுமானங்களையும் சிற்பங்களையும் எழில் குன்றாமல் பாதுகாக்கும் தொழில்நுட்பம் இருக்கிறது. அறநிலையத்துறையிடம் கோயிலைத் திறம்பட நிர்வகிக்கும் கட்டமைப்பு இருக்கிறது. இவ்விரு துறைகளின் இணைவால் கடந்த பல பத்தாண்டுகளில் எண்ணற்ற திருக்கோயில்கள் அவற்றின் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்குக் கண்டிருக்கின்றன. எனவே தனியாரும் முடிந்தவரை வரலாற்றுக் கண்ணோட்டம் கொண்டு பழமையைப் பாதுகாக்க உளம்கொண்டால் நம் முன்னோர் நமக்களித்த வரலாற்றுக்களங்கள் கம்பீரம் குறையாமல் நிமிர்ந்து நின்று நமக்கு வழிகாட்டும். பக்திதான் கோயில்களின் முதன்மையான நோக்கம் என்றாலும் கோயில்களை இழந்துவிட்டால் வரலாற்றை இழக்கவேண்டி வரும் என்பதையும் வரலாற்றை இழந்த இனம் இவ்வுலகில் எத்தகைய நிலையை அடையும் என்பதையும் தமிழ்ச்சங்கத்தார் அறிந்திருப்பார்கள் என்பது திண்ணம்.